உ
சிவமயம்



கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த

அமரர்

# திருமதி. பவளரத்தினம் பஞ்சலிங்கம்

அவர்களின்

# நினைவு மலர்

14.11.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்"

மலர்வு

11 * 05 * 1942



உதிர்வு

15 * 10 * 2011

அமரர்

# திருமதி. பவளரத்தினம் பஞ்சலிங்கம்

## திதி நிர்ணயம்

நேரிய கரவருடஞ்சேர் புரட்டாதியில்
சீரிய சனிவார மதி மங்கு சதுர்த்தியில்
நல்லாள் பவளரத்தினம் நானில
இல்லம் துறந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு - கொள்ளுப்பிட்டி
ஸ்ரீதேவி கருமாரி அம்மன் - ஸ்ரீஐயப்ப சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம்மை ஆளாக்கி
வளர்த்து அன்புருவாக்கிய
எமது அருமைத் தாயாருக்கு
இந் நினைவு மலரைச்
சமர்ப்பணமாக்குகிறோம்

**- பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மா சாந்தியடைவதாக !

**கா**ந்தனின் அருமைத் தாயாரின் மறைவுச் செய்தி எமக்கு பெருங்கவலையை ஏற்படுத்தியிருந்தாலும்

'மண்ணில் பிறந்தவர்கள் யாவரும்
ஒருநாள் விண்ணுலகு ஏகுவர்'

என்ற நியதிப்படி மனதைத் தேற்ற வேண்டியவர் களாகிறோம்.

கொள்ளுப்பிட்டி ஸ்ரீ தேவி கருமாரியம்மன் ஸ்ரீ ஐயப்ப சுவாமி ஆலயத்தில் நாம் மாலையிட்ட காலம் தொடக்கம், இன்றுவரை காந்தன் ஸ்வாமியின் தொண்டினை எவரும் எளிதில் மறந்துவிடமுடியாது. கோவிலிலும் சரி - யாத்திரையின் போதும் சரி - சபரிமலையிலும் சரி எந்த வேலையைச் சொன்னாலும் செய்கின்ற மனத்தைரியமும் - பக்குவமும் அவரிடம் இருக்கிறது. இதற்கு மூல காரணமே அவரது தாயாரின் வளர்ப்பு என்றால் மிகையாகாது.

அவரது தாயாரும் அவர் மீது அளவுகடந்த அன்புடை யவராக இருந்தவர். தனது மகள் சாப்பிட்டபின்பே தான் சாப்பிடும் வழக்கத்தைக் கொண்டவர். இதை நாம் அவர்களது குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள் என்ற முறையில் தெரிந்து வைத்திருக்கிறோம். கொழும்பில் இருந்த வேளையில் தாயாரும், அக்காவும் தவறாது கோவிலுக்கும் - ஏனைய ஆலயங்களில் நிகழ்வு களுக்கும் வந்து சிறப்பிப்பது வழமை.

அன்னாரது ஆத்மா சபரிக்கு அருளிச் செய்த
ஸ்ரீ தர்மஸாஸ்தாவின் பாதாரவிந்தங்களைத்
திடமாக அடையும் என்று பிரார்த்திப்போமாக !

த.சுகந்தன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் பாடல்கள்

ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதி தேவா
மாதா பார்வதி பிதா மஹா தேவா
கஜானனா கஜானனா
கஜானனா ஜெய் கணபதி தேவா

உலகமே அம்மை அப்பன் என்றே உரைத்தவனே
ஓம் எனும் பிரணவ ரூபா நாதா கணபதியே
வருவாய் கணதியே வரம் தருவாய் குளநிதியே
அருள்வாய் கணபதியே அருள் புரிவாய் குணநிதியே

கலியுகவரதனே கற்பகவிநாயகனே
கண்கண்ட தெய்வம் நீயே கன்னிமூல கணபதியே
உன்பதம் சரணடைந்தேன் உமையவள் பாலகனே
மூல முதற் பொருளே மூஷிக வாகனனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லா ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.

## திருவாசகம்

தோலுந் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையு முடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூ தாய் கோத்தும்பீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

வைத்த பாதங்கள் மாலவன்
காண்கிலன் மலரவன் முடிதேடி
எய்த்து வந்திழிந்(து) இன்னமும்
துதிக்கின்றார் எழில்மறை அவற்றாலே
செய்த்தலைக் கமலம் மலர்ந்தோங்கிய
தில்லை யம்பலத் தானைப்
பத்தியாற் சென்று கண்டிட
என்மனம் பதைபதைப் பொழியாதே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீயாடும்போது உன்அடியின் கீழ் இருக்க வென்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



**தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி**
**யல்லலறுத் தானந்த மாக்கியதே - யெல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்**
**திருவா சகமென்னுந் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏக னனேகன் இறைவன் அடி வாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யா தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாத இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்க மளவுறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மன் பாடல்

சந்த்ர மௌலீஸ்வரி சங்கரி சங்கரி
மங்களப்ரதாயினி மதனகோடி சுந்தரி
மாதவஹரி சோதரி தேவி ஜெகன் மோகினி

உமையவளே அருள்புரிவாயம்மா
ஓம்காரரூபிணி அகிலாண்ட நாயகி
அடியார்கள் வினைதீர்க்கும் ஆதிபராசக்தி
நான் செய்த பிழைகளெல்லாம் பொறுப்பாயம்மா
ஜகதம்பிகே சிவரஞ்சனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன்
## சரணக்கோவை

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மாதா பிதா குரு தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்த மலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதானப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்போனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ்ச்சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மைப் பரம் பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குலதெய்வமே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | ஏழைப் பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கலியுக வரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவன் மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவவைணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அச்சங் கோயில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குளத்துப் புழைப் பாலகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பொன்னம்பல வாசனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வீரமணி கண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்திரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பையிலே பிறந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பந்தள மாமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சகலகலை வல்லோனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாந்தம் நிறை மெய்ப்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருமகனின் குறைதீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருதட்சணை அளித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | புலிப்பாலைக் கொணர்ந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வன்புலியின் வாகனனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தாயின் நோய் தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருவின் குருவே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் இருமுடிப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் எருமேலி சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் நித்திய பிரம்மச்சாரியே சரணம் ஐயப்பா
ஓம் நீலவஸ்திர தாரியே சரணம் ஐயப்பா
ஓம் பேட்டை துள்ளும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா
ஓம் சாந்திதரும் பேரழகே சரணம் ஐயப்பா
ஓம் பேருத்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா
ஓம் பேதமையை ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் காளை கட்டி நிலையமே சரணம் ஐயப்பா
ஓம் அதிர்வேட்டுப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் அழுதமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் ஆனந்தமிகு பஜனைப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் கல்லிடும் குன்றே சரணம் ஐயப்பா
ஓம் உடும்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் இஞ்சிப் பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் கரியிலந் தோடே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா
ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா நதி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் திருவேணி சங்கமமே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்ரீ இராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சக்தி பூஜை கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே சரணம் ஐயப்பா
ஓம் தீப ஜோதித் திரு ஒளியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | தீராத நோய் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பா விளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பழவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தென்புலத்தார் வழிபாடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திருபம்பையின் புண்ணியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நீலிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நிறைவுள்ளம் தருபவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அப்பாச்சி மேடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இப்பாச்சிக் குழியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிபீடமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சரங்குத்தி ஆலே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உரல்குழி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கருப்பண்ண சுவாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பகவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பரவசப் பேருணர்வே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பசுவின் நெய் அபிஷேகமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கற்பூரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நாகராசப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மாளிகைப் புறத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மஞ்சமாதா திருவருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அக்கினிக் குண்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அலங்காரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பஸ்மக் குளமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சற்குரு நாதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மகரஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மங்கள மூர்த்தியே | சரணம் ஐயப்பா |

ஓம் பூத நாதாய வித்மஹே
பவ நந்தனாய தீமஹி
தந்நோ சாஸ்தப்பிரசோதயாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யின்றி மெய்யோடு

பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால்
ஐயனை நீ காணலாம் சபரியில்
ஐயனை நீ காணலாம்

ஐயப்பா சுவாமி ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா

அவனை நீ நாடு அவன் புகழ் பாடு
புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்
உன்னை புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன

இருப்பது காடு வணங்குது நாடு
அவனைக் காண தேவை பண்பாடு
(ஐயப்பா சுவாமி ஐயப்பா)
(பொய்யின்றி மெய்யோடு)

பூஜைகள் போடு தூய அன்போடு
பெயரோடு வாழவைப்பான் ஐயப்பன்
நல்ல பெயரோடு வாழ வைப்பான் ஐயப்பன்

அனைவரும் வாருங்கள் ஐயனை நாடுங்கள்
அருள்வேண்டும் அன்பரையெல்லாம் வாழவைப்பான்
(ஐயப்பா சுவாமி ஐயப்பா)
(பொய்யின்றி மெய்யோடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணம் விளித்தால் மரணம் இல்லை

சரணம் விளித்தால் மரணம் இல்லை
சாஸ்தா நாமம் அருளின் எல்லை
தருணம் இதுதான் சரணம் போடு
தர்மசாஸ்தா பாதம் நாடு - (சரணம் விளித்தால்)

காக்கும் தெய்வம் திருமால் நாமம்
கருணை செய்யும் ஈஸ்வரன் நாமம்
கலந்து மகிழ்ந்த ஐயன் நாமம்
கூவி அழைத்தால் புவியில் ஷேமம் - (சரணம் விளித்தால்)

காடும் மேடும் வீடும் வாசல்
கல்லும் முள்ளும் மல்லிகை மெத்தை
ஆடும் மனதை அடக்கி வா வா
ஐயன் மேடை நாடி வா வா - (சரணம் விளித்தால்)

இருந்தால் உலகம் சுற்றி நிற்கும்
இழந்தால் எதுதான் பற்றி நிற்கும்
குருவை நாடு மாலையைப் போடு
கோடி ஞான ஜோதியைப் பாடு - (சரணம் விளித்தால்)

நெய்போல் உருகும் மனதில் ஐயன்
நேரில் வருவான் நிறையத் தருவான்
வள்ளல் ஜோதி வழியைக் காட்டும்
வையம் போற்றும் வானம் போற்றும் - (சரணம் விளித்தால்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழி நடைச்சரணம்

| | |
|---|---|
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| சாமிசரணம் | ஐயப்பசரணம் |
| பள்ளிக்கட்டு | சபரிமலைக்கு |
| இருமுடிக்கட்டு | சபரிமலைக்கு |
| கட்டும் கட்டும் | சபரிமலைக்கு |
| கன்னிக்கட்டு | சபரிமலைக்கு |
| பழமலைக்கட்டு | சபரிமலைக்கு |
| அள்ளிக்கட்டு | சபரிமலைக்கு |
| நம்முடையயாத்திரை | சபரிமலைக்கு |
| யாரைக் காண | சாமியைக் காண |
| சாமியைக்கண்டால் | பாவம் தீரும் |
| பாவம் தீர்ந்தால் | மோட்சம் கிட்டும் |
| எப்போகிட்டும் | இப்போ கிட்டும் |
| பகவானே | பகவதியே |
| தேவனே | தேவியே |
| ஈஸ்வரனே | ஈஸ்வரியே |
| சுவாமி சரணம் | ஐயப்ப சரணம் |
| பகவான் சரணம் | பகவதி சரணம் |
| தேவன் சரணம் | தேவி சரணம் |
| ஈஸ்வரன் சரணம் | ஈஸ்வரி சரணம் |
| வில்லாளி வீரனே | வீரமணி கண்டனே |
| பூலோக நாதனே | பூமிப்பிரபஞ்சனே |
| ராஜாதி ராஜனே | ராஜகுமாரனே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சுவாமிமாரே | ஐயப்பமாரே |
| கல்லும் முள்ளும் | காலுக்கு மெத்தை |
| குண்டும் குழியும் | கண்ணுக்கு வெளிச்சம் |
| மேடு பள்ளம் | பரமானந்தம் |
| கடினம் கடினம் | ஏற்றம் கடினம் |
| ஏற்றம் கடினம் | கரிமலை ஏற்றம் |
| தேகபலம் தா | பாத பலம் தா |
| ஏற்றிவிடப்பா | தூக்கிவிடப்பா |
| தாங்கி விடப்பா | ஏந்தி விடப்பா |
| சுவாமி பாதம் | ஐயப்ப பாதம் |
| நெய்யபிஷேகம் | சுவாமிக்கே |
| கற்பூர தீபம் | சுவாமிக்கே |
| பாலபிஷேகம் | சுவாமிக்கே |
| தேனபிஷேகம் | சுவாமிக்கே |
| பன்னீரபிஷேகம் | சுவாமிக்கே |
| புஷ்பலங்காரம் | சுவாமிக்கே |
| அவலும் மலரும் | சுவாமிக்கே |
| முத்திரைத் தேங்காய் | சுவாமிக்கே |
| காணிப்பொன்னும் | சுவாமிக்கே |
| வெள்ளரி நேத்யம் | சுவாமிக்கே |
| கதலிப் பழமும் | சுவாமிக்கே |
| கருடன் வருவதும் | சுவாமிக்கே |

சுவாமி திந்தக்க தோம் தோம் ஐயப்ப திந்தக்க தோம் தோம்
ஐயப்ப திந்தக்க தோம் தோம் சுவாமி திந்தக்க தோம் தோம்

| | |
|---|---|
| மாலைக்குள்ளே | ஐயப்பா |
| மனசுக்குள்ளே | ஐயப்பா |
| பூவுக்குள்ளே | ஐயப்பா |
| மணத்துக்குள்ளே | ஐயப்பா |
| சுவாமியே | ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் கவசம்

## காப்பு

அரிஹர புத்ரனை ஆனந்த ரூபனை
இரு மூர்த்தி மைந்தனை அறுமுகன் தம்பியை
சபரகிரீசனை சாந்த சொரூபனை
தினம் தினம் போற்றி பணிந்திடுவோமே

ஐயப்பதேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம் தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே.

## நூல்

மண்ணுல கெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதர ஐயப்பா வருக. 1

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக. 2

பூத நாயகா வருக வருக
புஷ்களைபதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணி கண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக. 4

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இரு வினை களைந்தே எனையாட்கொள்ள
இரு மூர்த்தி மைந்தா வருக வருக. 5

பதினெண்படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடி பணிந்திடுமே. 6

சபரிகிரீசனை நினைத்தே நீறிட
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே. 7

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர் களெல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடிபணிந்தேத்துவர். 8

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரிகிரீசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் சரணம் சத்குருநாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம். 9

**வேண்டுதல்**

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க 10

இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முக பூஜ்யன் நாவினை காக்க 11

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களை காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையை காக்க 12

வீரமணிகண்டன் விரல்களைக் காக்க
கயிலை மைந்தன் கைகளை காக்க
மணிகண்டதேவன் மார்பினைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க 13

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா துடைதனைக் காக்க 14

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாத்தினைக் காக்க
விஜய குமாரன் விரல்களைக் காக்க 15

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாள ரூபி காலையில் காக்க
நவக்ரஹநாதன் நடுப்பகல் காக்க 16

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க 17

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க 18

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என்பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலைதனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய் 20

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய் 21

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணு காமல்
என்றுமே காப்பாய் எருமேலி தேவா 22

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரி கிரீசா 23

காமம் குரோதம் லோபம் மோஹம்
மதமாச் சர்யமெனும் அறுபெரும் பேய்களும்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய் 24

சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம், லோபம், துன்மார்க்கம் கல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருள்வாய் 25

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய் யாமல்
உள்ளன் புடனே உன் திரு நாமம்
அனுதினம் சொல்ல அருள் தருவாயே 26

## நமஸ்ஹாரம்

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ 27

பொன்னம் பலத்துறை புண்யா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்யா நமோ நமோ
சுரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தனா மணிகண்டா நமோ நமோ 28

சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினெட்டாம் படிப்பாடல்

ஒன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

இரண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

நான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஐந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஏழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

எட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஒன்பதாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பத்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினொராம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பன்னிரெண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதின்மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதின்நான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதினைந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதினாறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதினேழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதினெட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

சத்தியத் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

படி தொட்டு வந்தனம் சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஓம் சத்தியமான பொண்ணு பதினெட்டுப் படிகளே
சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

அன்பே உருவமாக வாழ்ந்து வழிகாட்டிய எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு எமது துயரில் நேரில் வந்து பங்கு கொண்டவர்களுக்கும், உற்ற நேரத்தில் உதவி புரிந்தவர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் சமயக் கிரியைகளை சிறப்புற நடாத்தித் தந்த குருக்கள் ஐயா அவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் இன்று நடைபெறும் வீட்டுக் கிருத்திய மதிய போசனத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் இம்மலரை சிறந்த முறையில் அச்சிட்ட Fast Printers பதிப்பகத்தாருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி



இங்ஙனம்
பாலசுப்பிரமணியம் (மகன்)
புவனேஸ்வரி (மகள்)
சிவகாந்தசெல்வபாலன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

" இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும் "

~ பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ~

Fast Printers : 289-1/2, Galle Road, Colombo - 06 T.P-0112362312.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org